# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.46/2024**

Deposition of Witness of PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : தீபிகா | Calling | : |
| Father/Husband's Name | : ஜெகதீஸ்வரன் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 27th January 2026.

1 ம் எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது மொடக்குறிச்சி வேலம்பாளையம் பாரதியார் வீதியில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். அ.சா.1 ஜெகதீஸ்வரன் எனது கணவர் ஆவார். கடந்த 02.10.2018 ம் தேதி அதிகாலை சுமார் 1.10 மணியளவில் நானும், எனது கணவரும் வீட்டில் தூங்கி கொண்டிருந்தோம். அப்போது கதவை தட்டும் சத்தம் கேட்டு இருவரும் எழுந்து வந்தோம். எனது கணவர் லைட்டை போட்டு வெளியே வந்தபோது சுமார் 30 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் ஜட்டியுடன் நின்று கொண்டிருந்தார். இருவரும் சத்தம் போட்டோம். உடனே அந்த நபர் சுவர் ஏறி குதித்து தப்பி ஓடிவிட்டார். இது சம்பந்தமாக எனது கணவர் புகார் கொடுத்தார். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

நான் சம்பவத்திற்கு பின்னிட்டு எத்தனை மணிக்கு காவல்நிலையம் சென்றேன் என்றால் அன்றைய தினம் இரவே சென்றோம். எத்தனை மணிக்கு காவல்நிலையம் சென்றேன் என்றால் இந்த வழக்கு சம்பவம் நள்ளிரவு 1.00 மணிக்கு நடந்தது, காலையில் சுமார் 10.00மணிக்கு காவல்நிலையம் சென்றேன். பொதுவாக இரவு அனைத்து கேட்டுகளையும் பூட்டி விட்டு தான் தூங்க

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.01.28 18:33:54 +0530

செல்வேன் என்றால் ஆமாம். அதேபோல சம்பவத்தினத்தன்று பூட்டிவிட்டு தான் தூங்க சென்றேன் என்றால் சரிதான். போலீஸார் விசாரணையில் நாங்கள் அனைத்து கதவுகளையும் பூட்டிவிட்டு தான் தூங்க சென்றோம் என்ற விபரத்தை சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். போலீஸார் எத்தனை மணிக்கு எங்கள் வீட்டிற்கு வந்தார்கள் என்றால் காலை 10.00 மணிக்கு வந்தார்கள். பின்னிட்டு போலீஸார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. நான் வீட்டிற்குள்ளே தூங்கி கொண்டிருக்கும்போது கேட்டை நீக்கிய சத்தம் கேட்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். எனது வீட்டிற்கு அருகில் உள்ள கதிர்வேல் வீட்டில் CCTV கேமரா உள்ளதா என்றால் உள்ளது.

2. போலீஸார் CCTV கேமராவை பரிசோதனை செய்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் சொன்ன மாதிரி சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், அவ்வாறு நடந்திருந்தால் கதிர்வேல் வீட்டில் உள்ள CCTV கேமராவில் பதிவாகியிருக்கும் என்றும், அதை ஆய்வு செய்திருந்தால் உண்மைத்தன்மை தெரிந்திருக்கும் என்றும், அதை பரிசோதனை செய்யாமல் எதிரி மீது பொய்யாக புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.01.28 18:33:59 +0530

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.46/2024**

Deposition of Witness of PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : பி. ஜெகதீஸ்வரன் | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 27th January 2026.

1 ம் எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது வேலம்பாளையம் பாரதியார் வீதியில் குடியிருந்து வருகிறேன். கட்டிட கான்ட்ராக்டராக வேலை செய்து வருகிறேன். கடந்த 02.10.2018 ம் தேதி அதிகாலை 1.10 மணியளவில் நானும், எனது மனைவியும் வீட்டில் துாங்கி கொண்டிருந்தோம். வெளியே சத்தம் கேட்டது. நான் எழுந்து வந்து லைட்டை போட்டு கதவை திறந்து பார்த்தபோது முகமூடி போட்ட சுமார் 30 வயது மதிக்கத்தக்கஒரு நபர் வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் திருடன், திருடன் என்று சத்தம் போட்டேன். உடனே அந்த நபர் காம்பவுன்ட் சுவரை எட்டி குதித்து வெளியே ஓடிவிட்டார். இது சம்பந்தமாக மொடக்குறிச்சி காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப் படுகிறது.** போலீஸார் என் வீட்டிற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு என்னை விசாரித்தார்கள். போலீஸார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

நான் தினமும் காலை எத்தனை மணிக்கு வேலைக்கு சென்று வீடு திரும்புவேன் என்றால் காலை 8.00 மணிக்கு சென்று இரவு 10.00 மணிக்கு

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.01.28 18:34:06 +0530

வருவேன். சம்பவ நடந்த மெயின் கேட்டிற்கும் எனது அறைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 30 அடி இருக்கும். பொதுவாக இரவு அனைத்து கேட்டுகளையும் பூட்டி விட்டு தான் தூங்க செல்வேன் என்றால் ஆமாம். அதேபோல சம்பவத்தினத்தன்று பூட்டிவிட்டு தான் தூங்க சென்றேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்களா என்றால் அடுத்த நாள் வந்து விசாரித்தார்கள்.

2. எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் வீட்டிற்கும் வந்தார்கள், காவல்நிலையத்திற்கு வைத்தும் விசாரித்தார்கள். பின்னிட்டு போலீஸார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீஸார் அடையாள அணிவகுப்பு நடத்தி எதிரி பற்றி எனக்கு ஏதாவது சொன்னார்களா என்றால் எதுவும் சொல்லவில்லை. எனது வீட்டிற்கு அருகில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு அருகில் உள்ள கதிர்வேல் வீட்டில் CCTV கேமரா உள்ளதா என்றால் உள்ளது.

3. போலீஸார் CCTV கேமராவை பரிசோதனை செய்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் சொன்ன மாதிரி சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், அவ்வாறு நடந்திருந்தால் கதிர்வேல் வீட்டில் உள்ள CCTV கேமராவில் பதிவாகியிருக்கும் என்றும், அதை ஆய்வு செய்திருந்தால் உண்மைத்தன்மை தெரிந்திருக்கும் என்றும், அதை பரிசோதனை செய்யாமல் எதிரி மீது பொய்யாக புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.01.28 18:34:11 +0530